# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)

# மாதிரிப் பரீட்சை - III 2018

வரலாறு – II | 33 T II | மூன்று மணித்தியாலங்கள்

- ❖ பகுதி 1 இன் முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II இலிருந்து நான்கு வினக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- ❖ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி 1

1\. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) வளவகங்கை, மகாநாககுல, கற்பிட்டி, மகாகம, பதிராஜவல, குருளுவாவி, வல்லிபுரம், சொரபொரவாவி, யாப்பகுவா, உருவெலகம, கனகராஜன் ஆறு, உடரஞ்சமடம

(12 புள்ளிகள்)

(ii) பாக்குநீரிணை, சீயம், போர்த்துக்கல், சுமாத்திராத்தீவு, மும்பாய், சுயெஸ்கால்வாய் (06 புள்ளிகள்)

(ஆ) (i) மேல் வரும் ABCD ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - வசப மன்னனின் மரணத்தின் பின் அரசுரிமையைப் பெற்றுக் கொண்ட அவரது மகன்.

B - சீதாவக்கையின் தெல்கம் விகாரையில் இருந்த புனித தந்ததாதுவை கண்டியில் பிரதிஸ்டை செய்த கண்டி ஆட்சியாளன்.

C 1505 ஆம் ஆண்டில் போர்த்துக்கேய மன்னனால் கிழக்கு நாடுகளின் இராசப் பிரதிநாதியாக நியமிக்கபட்டவர்.

D. இரண்டாம் உலக யுத்தத்துடன் தொடர்புடைய இத்தாலிய பாசிச ஆட்சியாளர்?

(04 புள்ளிகள்)

❖ A,B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து, கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் உங்கள் விடைத்தாளின் எழுதுக

A



(ii) 1. ‘A’ யினால் காட்டப்பட்ட நிர்மாணிப்பின் பெயர் என்ன?

2. இது காணப்படும் விகாரையின் பெயர் யாது?

3. இவ் விகாரை அமைந்துள்ள மாவட்டம்?

4. இப்படத்தில் உள்ளவை குறிக்கும் விடயங்களுள் ஒன்றினைத் தருக. (04 புள்ளிகள்)

B



(iii) 1.‘B’ யினால் காட்டப்பட்டுள்ள படத்தின் பெயர் என்ன?

2. இது அமைந்துள்ள மாவட்டம் எது?

3. இதனை அமைத்த மன்னன்?

4. இதில் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் கட்டடக்கலை மரபு? (04 புள்ளிகள்)

## பகுதி – II

02) (i) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் உட்கொண்ட தாவர உணவுகள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) பின்வரும் பதங்கள் குறிக்கும் பொருளைத் தருக.

1) அவரண

2) வாபிகாம

3) பரிகித்தகம

4) அபரிகித்தகம (4 புள்ளி)

(iii) ஆதிகால மனிதன் பயன்படுத்திய கல்லறை மயானங்கள் காணப்பட்ட இடங்கள் மூன்றையும், களிமண் ஓட மயானங்கள் காணப்பட்ட இடங்கள் இரண்டையும் பெயரிடுக. (5 புள்ளி)

(iv) முன் வரலாற்றுக்கால மக்களின் வாழ்க்கை முறையை மூன்று காரணிகளின் உதவியுடன் விளக்குக. (6 புள்ளி)

03) (i) A, B, C என்ற ஒழுங்கில் தரப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் கூறப்படும் விடயங்கள் ஒவ்வொன்று தருக.

A - பனாகடுவ செப்புசாசனம்

B - வல்லிபுரம் பொற்சாசனம்

C - தெடிகம கல்வெட்டு (3 புள்ளி)

(ii) மத்திய அரசாங்கத்துடன் தொடர்புடைய கீழ்வரும் பணிகளுக்குப் பொறுப்பானவர்களின் பதவிப் பெயர்களை A, B, C, D ஒழுங்கில் எழுதுக.

A - தளபதி

B - நகரபரிபாலர்

C - வர்த்தக நடவடிக்கைக்கான தலைவர்

D - அமைச்சர்கள் (4 புள்ளி)

(iii) அநுராதபுர காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களின் வெளிநாட்டுத் தொடர்புகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) பொலன்னறுவையைத் தலைநகராகத் தெரிவு செய்தமை முதலாம் விஜயபாகுமன்னனின் மதியூகமான கொள்கையாகும். இதனை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக.(6 புள்ளி)

04) (i) சேனைப் பயிர்ச்செய்கைக்கு இலக்கியங்கள், கல்வெட்டுக்களில் வழங்கப்பட்ட பெயர்களை A, B, C என்ற ஒழுங்குமுறையில் தருக.

A - புத்சரண என்ற இலக்கியம்

B - உம்மக்க ஜாதகம்

C - கல்வெட்டுக்கள்

(3 புள்ளி)

(ii) சேனைப் பயிர்ச்செய்கையுடன் தொடர்புடைய பின்வரும் சொற்களின் பொருளை A, B, C, D என்ற ஒழுங்குமுறையில் தருக.

A - நவதெனிசேனை

B - கனத்த

C - தண்டுவெட்ட

D - பெல (4 புள்ளி)

(iii) புராதன காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச்செய்கையின் பண்புகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) புராதன காலத்தில் இலங்கையில் வாழ்ந்த மக்களிடையே இணக்கப்பாடான சூழல் காணப்பட்டது என்பதனை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

05) (i) பொலநறுவை இராசதானியின் வீழ்ச்சியின் பின் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு அரண்கள் A, B, C, என்ற ஒழுங்குமுறையில் கீழே தரப்படுகின்றது. அதனை உருவாக்கியவர்களின் பெயர்களைத் தருக.

A - யாப்பகுவா

B - கோவிந்தமலை

C - மினிப்பே (3 புள்ளி)

(ii) மேல்வரும் A, B, C, D ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A - 6 ஆம் பராக்கிரமபாகுவின் மரணத்தின் பின் கோட்டை இராச்சிய மன்னனாக முடிசூடியவன்

B - யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன்

C - தென்னிந்தியாவில் இருந்து வந்த குறுநிலமன்னன் ஆரியச்சக்கரவர்த்தி தலைமையிலான குழு கொண்டு சென்ற புனித தந்ததாதுவைப் பாண்டிய மன்னனிடமிருந்து மீட்டெடுத்து மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வந்தவன்

D - குருனாகலைத் தலைநகராகத் தெரிவு செய்த மன்னன் (4 புள்ளி)

(iii) கம்பளை இராசதானிக் காலத்தின் சிறப்பு அம்சங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) சிங்கள இலக்கிய வளர்ச்சியின் பொற்காலமாகக் கோட்டை இராசதானி கருதப்படுகின்றது. மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

06) (i) A - கண்டி இராச்சியத்தினை மூன்றாகப் பிரித்தமை

B - கி.பி 1796 இல் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றிய போது கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்தமை

C - தலதாமாளிகைக்கு மனங்கவரும் பார்த்திருப்பு (பத்திரிப்பு) மண்டபத்தினை அமைத்தமை.

போன்றவற்றுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களைத் தருக. (3 புள்ளி)

(ii) கண்டி இராச்சியம் தனது சுயாதீனத்தைப் பாதுகாத்துக்கொள்ள போர்த்துக்கேயருடன் யுத்தம் செய்த நான்கு இடங்களைத் தருக. (4 புள்ளி)

(iii) 1ஆம் விமலதர்ம சூரியன் கண்டி இராச்சியத்தினை போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுப்பதற்குக் கையாண்ட நடவடிக்கைகளை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பு முறையை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

07) (i) இலங்கையில் பின்வரும் சமயங்களில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய தலைவர்கள் ஒவ்வொருவரின் பெயரைத் தருக. (3 புள்ளி)

A - இந்துசமயம்

B - பௌத்தம்

C - இஸ்லாம்

(ii) பௌத்தமத மறுமலர்ச்சியின் விளைவாக ஐம்பெரும் விவாதங்கள் இடம்பெற்ற நான்கு இடங்களைத் தருக. (4 புள்ளி)

(iii) கோல்புறூக் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் கீழ் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் முக்கியமான மூன்று பண்புகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

## பகுதி - III

08) (i) பிரித்தானியாவில் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட மூன்று துறைகளையும் தருக. (3 புள்ளி)

(ii) பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் நான்கு தருக. (4 புள்ளி)

(iii) நெசவுக் கைத்தொழில்

A - கைத்தொழில் மயமைக்கான காரணங்கள்

B - நெசவுக் கைத்தொழிலின் புதிய கண்டுபிடிப்புக்களும் பயன்களும் தொடர்பாக விளக்குக. (5 புள்ளி)

(iv) கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட சூழல் மாசடைதலை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)

09) (i) பிரித்தானியா 1764, 1765 காலப்பகுதியில் அமெரிக்கா மீது விதித்த சட்டங்கள் மூன்று தருக. (3 புள்ளி)

(ii) பிரான்சியப் புரட்சியின் விளைவாக பிரான்சில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு தருக. (4 புள்ளி)

(iii) 1 ஆம் உலகயுத்த காலத்தில் ஐக்கிய அமெரிக்க அரசு யுத்தத்தில் இணைந்தமை ஜேர்மனியின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது. இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

(iv) சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளி)



